[17th September 1958

ஏற்பாடு செய்திருக்கிறோம். இவ்வாறு கணக்குத் தீர்ப்பதை மத்திய ஸ்டோர்ஸ்-ம் கூட்டுறவு மத்திய ஸொஸைடியும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு அவைகள் இன்னும் கூட்டங்கள் கூடி முடிவு செய்யவில்லை. விஷயம் இவ்வளவுதான. எனவே, அந்த ஸ்தாபனத்திற்கு ஏராளமாக நஷ்டம் வந்து விட்டதாகக் கருதக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

*258 *Q.*—Sri A. V. P. ASAITHAMBI (on behalf of Sri P. U. Shanmugam) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு கிடங்கினின்று இலங்கைக்கு மிளகாய் ஏற்றுமதி சம்மந்தமாக சர்க்காருக்கு புகார் வந்ததுண்டா ?

(ஆ) சர்க்கார் அதன் பேரில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under investigation.

SRI S. M. ANNAMALAI : மிளகாயின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போவதால், வேறு நாடுகளுக்கு மிளகாய் ஏற்றுமதி யாவதைத் தடைசெய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது, வெளிநாடுகளுக்கு நாம் எவ்வளவுக் கெவ்வளவு சாமான்களை ஏற்றுமதி செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நமது நாட்டுத் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கான வசதிகள் நமக்கு அதிகம் ஏற்படும். அவ்வாறு நாம் நினைக்கும்போது, மிளகாய் ஏற்றுமதியை—அதுவும், அது நன்றாக விற்பனையாக விவசாயிக்கு நல்ல பணம் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கும்போது—தடுப்பதற்கு கனம் அங்கத்தினர் யோசனை கூறுவது அவ்வளவு பொருத்தமாகத் தென்படவில்லை.

SRI T. T. DANIEL : May I know from the Hon. the Minister the nature of the complaint ?

THE HON. SRI R. VENKATARAMAN : Here there is no complaint. But in the other case, there was a complaint about the quantity. கோயம்புத்தூர் சங்கத்தில், அவர்கள் ப்ரைமரி ஸொஸைடியிலிருந்து வாங்கவில்லை என்ற புகார் இருக்கிறதே தவிர, தரத்தை (க்வாலிடியை) பற்றிய புகார் இல்லை.

Agricultural Colleges

*259 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the places in which Agricultural Colleges are located in Madras State;

(*b*) how many candidates studied in these institutions during the years 1957 and 1958; and

(*c*) how many of them were Harijans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is only one Agricultural College in the State at present and it is located at Coimbatore.

(*b*) The total number of students who studied in 1957 and 1958 in all the three B.Sc. (Ag.) degree classes was 364 and 393, respectively.